# லீ குவான் இயூ இருமொழித் திறன் நிதியில் மேலும் இரண்டு திட்டங்கள்

இரு மொழிகள் பேசுவதற்கு ஊக்கமளிக்கும் லீ குவான் இயூ நிதி, இளம் பிள்ளைகளிடையே இரு மொழிகள் கற்றலை ஊக்குவிக்கும் பொருட்டு மேலும் 3 திட்ட முன் வரைவுகளை ஆதரிக்கிறது. இந்த நிதி ஆதரிக்கும் திட்டங்களின் எண்ணிக்கை 16ஆக உயர்கிறது.

மலாய் மற்றும் ஆங்கிலத்தில் சிறு அளவிலான செய்திகளைக் கொண்ட சிங்கப்பூர் பிரஸ் ஹோல்டிங்ஸின் மலாய் மொழி நாளிதழான பெரிதா ஹரியன், பெரிதா மிங்கூ வெளியிடும் பாலர் பள்ளிக்கான இலவச மாதாந்திர இதழுக்கு இந்த நிதி உதவி வழங்கப்படும்.

சீன ஒபரா குறித்த 'பிரெயின்சைல்டு' நிறுவனத்தின் இருமொழி படப்புத்தகம், ஆசிரியர் மற்றும் இசையமைப்பாளரான ஆன்னி லிம் உருவாக்கவிருக்கும் 15 ஆங்கிலம் மற்றும் சீன மொழிப் பாடல்கள் ஆகியவை இரண்டாவது திட்ட முன்வரைவாகும்.

இந்த நிதிக்கு தகுதிபெறுவதற்கு சிங்கப்பூர் சூழலில் இருமொழிக் கற்றலை ஊக்குவிக்கும் கற்றல், கற்பித்தல் தொடர்பான திட்டங்கள் வரையப்பட வேண்டும். விவரங்களுக்கு www.bilingualism.sg என்ற இணையப்பக்கத்தை நாடவும்.